(c) whether there is any litigation for over 30 years in this connection?

கடம்பாகுளம் மதகு.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) திருநெல்வேலி மாவட்ட திருச்செந்தூர் தாலுக்கா கடம்பாகுளம் மதகை ஒண்ணரை அடி தாழ்த்திக் கட்டத் திட்டம் இருக்கிறதா ?

(இ) இது தங்களைப் பாதிக்கும் என விவசாயிகள் கூறுகிருர்களா ?

(உ) இது சம்பந்தமாக 30 வருடமாக வழக்கு நடைபெற்று இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) இத்திட்டம் ஐந்து ஆண்டுகளுக்குத் தள்ளிப் போடப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டம் தங்கள் பாசன உரிமையைப் பாதிக்குமென கடம்பா ஆயக்கட்டுக்காரர்கள் கருதுகிருர்கள்.

(உ) 18–3–1965 நாளிட்ட ஒரு வழக்கு அறிவிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுக்கப்பட்டு, அது பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கு எதுவும் நடைபெறவில்லை. ஆனல், இது சம்பந்தமாக கடம்பா ஆயக்கட்டு தாரர்களுக்கும் கீழுள்ள ஆயக்கட்டுக்காரர்களுக்கும் நீண்டகாலமாக விவாதங்கள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

Ex-servicemen.

* 214. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the assistance given by the Government of Tamil Nadu for the ex-servicemen; and

(*b*) whether there is any special assistance fund for them?

முன்னுள் போர் வீரர்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முன்னுள் படை வீரர்களுக்கு தமிழக அரசு செய்யும் உதவிகள் யாவை ?

(இ) இவர்களுக்கென தனி உதவி நிதி ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) மேலவை முன் விவர அறிக்கை a ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(இ) ஆம். மூன்று தனி நிதிகள் உள்ளன. அவையாவன—

(1) தமிழ்நாட்டு முன்னுள் போர் வீரர்கள் உதவி நிதி (Tamil Nadu Ex-Services Personnel Benevolent Fund)

(2) தமிழ்நாட்டில் படை வீரர் போர் பிற்கால சீரமைப்புத்திட்டநிதி (Tamil Nadu Post-War Services Reconstruction Fund)

(3) முன்னுள் போர் வீரர்களின் மறு வாழ்துவுக்கான சிறப்பு நிதி (Special Fund for Reconstruction and Rehabilitation of Ex-Servicemen.)

---

a Printed as Appendix I on Pages 25–28.

25th March 1969]

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, whether in employing personnel in the Government departments, any special preference is shown to ex-service men? Is any percentage reserved for the ex-service men?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : முந்திய ஆண்டில் 6,845 முன்னுள் படை வீரர்கள் வேலை வாய்ப்புத் தேடிப் பதிவாகியுள்ளனர். அவர்களில் 1,133 முன்னுள் படை வீரர்களுக்கு வேலை தேடிக் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு இத்தனை சதம் என்று எதுவும் ஒதுக்கப்படவில்லை. பலவேறு நிர்வாகங்களிலும் அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

திரு வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த முன்னுள் படை வீரர்களின் சந்ததிகள், குழந்தைகளுக்கு மெட்ருஸ் சர்வீஸ் கமிஷன் போன்றவை மூலமாக சில சத விகித வேலைகளை ஒதுக்கி வாய்ப்பளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதைப் போன்ற செயற்குறிப்பு எதுவும் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் சொல்லலாம்.

Exemption granted to shops and establishments

* 215. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether representations have been received from the Association of shop assistants that the present exemption granted to shops and establishments employing three and more than three persons should not be renewed this year; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. THIRU S. MADHAVAN : (*a*) It is presumed that the member refers to the exemption granted to shops and establishments employing three and less than three persons. If so the answer is in the affirmative.

(*b*) The Government have not revived the grant of exemption which had already expired on the 9th February 1967.

திரு. எஸ். இராகவாநந்தம் : இன்றைக்குள்ள shops and establishments சட்டப் பிரகாரம் மூன்று பேர்களுக்குள்ளே இருக்கிற நிறுவனங்களுக்கு அந்தச் சட்டம் பொருந்தாது என்று முன்னைய அரசாங்கம் ஒரு ஜி.ஒ. அனுப்பியிருக்கிறது. அதை ரத்து செய்து, ஒரு தொழிலாளியாக இருந்தாலும், இரண்டு தொழிலாளிகளாக இருந்தாலும், shops and establishments சட்டம் பொருந்ததும் என்று அந்தச் சலுகையைப் பெறுவதற்கு அரசாங்கம் ஏதாவது அறிக்கை விடுமா அல்லது மாற்றியமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : என்னுடைய விடையிலேயே சொல்லியிருக்கிறேன். ஏற்கனவே இருந்த விதி விலக்கை ஆண்டுதோறும் புதுப்பிக்க வேண்டுமென்பதைச் சென்ற ஆண்டு செய்யாமல், புதுப்பிக்காமல் விட்டுவிட்டோம். புதுப்பிக்க வேண்டுமென்று கடைச் சொந்தக்காரர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது.